# இயல் 7.7 - சதவீதமும் தனிவட்டியும்

பயிற்சி எண் :: 7.7.2.5.I

சதவீதமும் தனிவட்டியும் - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 2.5

Percentage & Simple Interest - Short bullets on the Chapter

## சதவீதமும் தனிவட்டியும் - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 2.5

1. சதவீதம் என்பது பகுதியில் 100 ஐக் கொண்ட ஒரு சிறப்பு பின்னம் ஆகும்.

(a) சரி ✓ (b) தவறு

$$80\% \text{ என்பது } 100 \text{ - க்கு } 80, \text{ அதாவது } 80\% = \frac{80}{100}$$

2. ஒரு பின்னத்தைச் சதவீதமாக மாற்றுவதற்கு அந்தப் பின்னத்தின் பகுதியையும் தொகுதியையும் 100 ஆல் பெருக்க வேண்டும்.

(a) தவறு (b) சரி ✓

$$\frac{2}{4} = \frac{2\times 100}{4\times 100} = \frac{2\times \cancelto{25}{100}}{\cancelto{1}{4}\times 100} = \frac{2\times 25}{100} = \frac{50}{100} = 50\%$$

3. ஒரு சதவீதத்தைப் பின்னமாக மாற்ற, அச்சதவீதத்தைப் பகுதியில் 100 ஐக் கொண்ட பின்னமாக எழுதவேண்டும்.

(a) சரி ✓ (b) தவறு

$$75\% = \frac{75}{100} \quad \text{(25 - ஆல் வகுக்க)}$$

$$= \frac{\cancelto{3}{75}}{\cancelto{4}{100}} = \frac{3}{4}$$

4. பின்னங்களைச் சதவீதமாக மாற்றுவதற்கு, கொடுக்கப்பட்ட பின்னத்தை 100% ஆல் பெருக்கவும்.

(a) தவறு (b) சரி ✓

$$\frac{3}{5} = \frac{3}{5}\times 100\% = \frac{300}{5} = \frac{\cancelto{60}{300}}{\cancelto{1}{5}} = 60\%$$

5. அசல் என்பது கடனாகப் பெற்ற அல்லது வழங்கிய தொகை

(a) சரி ✓ (b) தவறு

6. கடன் பெற்றவர் அந்த அசலை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பயன்படுத்தியதற்காக, ஒரு கூடுதல் தொகையை அசலுடன் சேர்த்துத் தர வேண்டும். அந்தக் கூடுதல் தொகையே வட்டி எனப்படும்.

(a) தவறு (b) சரி ✓

7. வட்டி விகிதம் என்பது அசலுக்கு ஒவ்வொரு ஆண்டும் சதவீதத்தில் கணக்கிடப்படும்.

(a) சரி ✓ (b) தவறு

8. நேரம் என்பது கடன் பெறப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காலத்தைக் குறிக்கும்.

(a) தவறு (b) சரி ✓

9. மொத்தத் தொகை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கடன் பெற்றவர் கடன் அளிப்பவருக்குத் திருப்பியளிக்கும் தொகையாகும். இதை, மொத்தத் தொகை = அசல் + வட்டி என்ற சூத்திரத்தின் மூலம் காணலாம்.

(a) சரி ✓ (b) தவறு

$$\underset{\text{மொத்தத் தொகை}}{A} = \underset{\text{அசல்}}{P} + \underset{\text{வட்டி}}{I}$$

10. தனிவட்டியைப் பின்வரும் சூத்திரத்தின் மூலம் காணலாம். தனிவட்டி $= \dfrac{P\times N\times R}{100}$

இங்கு, $P$ - அசல், $R$ - வட்டி வீதம், $N$ - ஆண்டுகள்

(a) தவறு (b) சரி ✓


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 14:28 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.